Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 6-00

சுக்10வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி18 ஞாயிற்றுக்கிழமை (03-09-1995) UTHAYAN A lively National Tamil Daily கதிர் 282


ஐரிஷ் மோனா கப்பல் விவகாரம்:

# புலிகள் விதித்த நிபந்தனை குறித்து இன்னும் தகவல் எதுவும் இல்லை!

## அரச தரப்பு நேற்றிரவு அறிவிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 3

முல்லைத்தீவுக் கடலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'ஐரிஷ் மோனா' கப்பல் விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடனும் அரச தரப்புடனும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு தொடர்ந்து தொடர்பு கொண்டுள்ளது. கப்பல் மாலுமிகளை விடுவிக்க விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனைகள் குறித்து இன்னும் அரசாங்கத்துக்கு தகவல் கிடைக்கவில்லை என்று இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது.

"ஐரிஷ் மோனா" கப்பலின் மாலுமிகள் 8 பேரும், எண்ணிக்கை குறிப்பிடப்படாத ஆண் பயணிகள் சிலரும் இன்னமும் கப்பலிலேயே இருப்பதாகக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை விடுவிப்பதானால் சில நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும் என விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாகவும் —

இது தொடர்பாக அரச தரப்பினருடன் விடுதலைப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

புலிகள் உறுதி மொழி தராவிடில்

## ஐரிஷ் மோனா கப்பல் மீது தாக்குதல் நடத்தப்படுமாம்!

கொழும்பு, செப். 3

"ஐரிஷ்மோனா" கப்பல் யுத்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படமட்டாது என விடுதலைப் புலிகள் உறுதி மொழி அளிக்கவேண்டும். இல்லையேல் அதன் மீது தாக்குதல் நடத்தப்படும்—என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று பி. பி. ஸி தெரிவித்தது.

கடத்தப்பட்ட "ஐரிஷ்மோனா" கப்பலை அது தற்போது தரித்து நிற்கும் இடத்தில் இருந்து வடக்கே கொண்டு செல்ல முயற்சி எடுக்கப்படுவதாகவும்.

விமானப்படையின் நடவடிக்கையால் அந்த முயற்சி தடுக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ]

மனித உரிமைகள் விடயத்தில் திருப்தி ஏற்படும் வரை

# இலங்கை அரசுக்கு அமெரிக்கா போர் ஆயுதங்களை வழங்காது!

## கொழும்பில் அந்நாட்டு அதிகாரி தெரிவிப்பு!

கொழும்பு, செப். 3

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் இலங்கை அரசின் நடவடிக்கைகளை அமெரிக்கா தொடர்ந்து அவதானிக்கும். அதுவரை பாரிய யுத்த தளபாடங்களை இலங்கைக்கு வழங்குவதில்லை என்ற நிலைப்பாட்டை அமெரிக்கா தொடர்ந்து கடைப்பிடிக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க ராஜாங்க அமைச்சின் தென்னாசியாவுக்கான உதவிச் செயலாளர் செல்வி ரொபின் ராபெல்.

இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்கா பெரிய அளவிலான இராணுவ ஒப்பந்தம் எதனையும் வைத்திருக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் படையினர் ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம், செப் 3

வவுனியாப் பகுதியில் இருந்து தமிழ் மக்கள் குடியிருப்புகள் மீது இராணுவத்தினர் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

சென்ற வியாழக்கிழமை இரவு தாண்டிக்குளத்துக்கு சமீபமாக உள்ள இராணுவ முகாமிலிருந்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இரணைஇலுப்பைக்குளம் பெரியமடு பகுதிகளில் ஷெல் கள்வீழ்ந்து வெடித்தன.

(இ-4)

# தமிழ்நாட்டின் கரையோரபகுதிகளில் புலிகள் தாராளமாக நடமாட்டம்

## மாநில அரசுமீது அமைச்சர் சிதம்பரம் குற்றச்சாட்டு

சென்னை, செப். 3

தமிழ் நாட்டின் கடலோர மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் தாராளமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருப்பது தெரியவந்திருப்பதாக இந்திய மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலினால் மக்களிடையே பயமும் உதவியற்ற உணர்வும் ஏற்பட்டிருக்கிறது.

இலங்கையிலிருந்து தமிழ் நாட்டின் தென்மாவட்டங்களுக்கு இவர்கள் வருவதைத் தடுக்க மாநில அரசு தவறிவிட்டது என்றும் குற்றம்

(6 ஆம் பக்கம் பார்க்க]

## அம்பாறையில் படையினர் தாக்குதல் நீடிக்கிறது

### தமிழர்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், செப். 3

அம்பாறைப் பகுதி காடுகளில் பொலிஸ் அதிரடிப்படையினர் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

காட்டு எல்லைப் புற தமிழ் கிராமங்களில் அதிரடிப் படையினர் மேற்கொண்ட கெடுபிடிகளால் அப்பகுதி தமிழர்களில் பெருமளவானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அதிரடிப்படையினர் தொடர்ச்சியாக நடத்தும் ஷெல் தாக்குதல்களால் காட்டு மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

[இ-4]

# 2 கப்பல்களிலிருந்தும் ஒரேசமயம் பொருள்கள் இறக்கப்படுகின்றன

வடமராட்சி, செப். 3

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இரு கப்பல்களில் இருந்து ஒரே சமயத்தில் பொருள்கள் இறக்கப்பட்டன.

நேற்று முன் தினம் வந்த மாஹோ கப்பலில் இருந்தும் நேற்று வந்த லங்கா கல்யாணி கப்பலில் இருந்துமே பொருள்கள் ஒரே சமயத்தில் இறக்கப்படுகின்றன.

மாஹோ கப்பலைப் போன்று நேரடியாக வராது லங்காகல்யாணி காங்கேசன் துறை துறைமுகத்துக்குச்

(6 ஆம் பக்கம் பார்க்க]

## குருநாகலில் சூறாவளி

குருநாகல் பகுதியில் நேற்று முன்தினம் வீசிய சூறாவளியால் பலத்த சேதங்கள் உண்டாகின.

குருநாகல் — புத்தளம் வீதியில் பல வீடுகள் சூறாவளியால் சேதமடைந்தன. மின்சாரம், தொலைத் தொடர்பு சேவைகளும் பாதிக்கப்பட்டன.

குருநாகல் நகரத்தில் மட்டும் ஏற்பட்ட சேதம் 15 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

இரத்மலானைப் பகுதியில் வீசிய சூறாவளியில் கடற்கரையோரத்தில் பல வீடுகள் சேதமடைந்தன.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் ஆசிரியர் 232 பேர் பற்றாக்குறை

தென்மராட்சி, செப். 3

தென்மராட்சி கல்விக்கோட்டத்தில் 232 ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பதாக தெரியவருகிறது.

அதிபர்கள் பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள் மொத்தமாக ஆயிரத்து 85 ஆளணியினர் தேவையான போதிலும் தற்போது 853 ஆளணியினரே கடமையில் உள்ளனர்.

ஆரம்ப ஆசிரியர்கள் 143 பேரும், ஆங்கில ஆசிரியர்கள் 80 பேரும், கணித ஆசிரியர்கள் 12 பேரும், சித்திர ஆசிரியர்கள் 15 பேரும் உடற்கல்வி ஆசிரியர்கள் 16 பேரும் பற்றாக்குறையாக உள்ளனர்.

ஆசிரியர் பற்றாக் குறையைத் தவிர்ப்பதற்காக ஆரம்பக் கல்விக்கு 92 கல்விக் கழக தொண்டர் ஆசிரியர்களும், ஆங்கில பாடத்திற்கு 71 பகுதிநேர ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக கோட்ட நிர்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)

## இலவச மருத்துவ முகாம்

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் நடத்தும் இலவச மருத்துவ சிகிச்சை தொடர் முகாமின் நாலாவது முகாம் இன்று காலை 8மணி முதல் நண்பகல் 12மணி வரை பருத்தித்துறை அம்பன் மகா வித்தியாலயத்தில் அதிபர் திரு மு.சிறிஸ்கந்தராஜா தலைமையில் நடைபெறும்.

நோயாளருக்கு டாக்டர், எம். யோகேஸ்வரதேவன் சிகிச்சை அளிப்பார்.

3 ஆம் ஈழப் போரில் இதுவரை

# 9 இராணுவ முகாம்கள் மற்றும் இரு பொலீஸ் நிலையங்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், செப். 3

மூன்றாம் ஈழப்போரில் இதுவரை 9 இராணுவ முகாம்களும் 2 பொலீஸ் நிலையங்களும் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன.

மிகப்பெரிய படைத் தளமான மண்டைதீவு படைத்தளம் தகர்த்து அழிக்கப்பட்டு பெருமளவிலான இராணுவ தளபாடங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

மட்டக்களப்பில் கட்டுமுறிவு, தரவைக்குளம், காயாங்கேணி, நாலாம்முச்சந்தி ஆகிய நான்கு இராணுவ முகாம்களும் தளவாய் பொலீஸ் நிலையமும் —

திருகோணமலையில் பள்ளிக் குடியிருப்பு இராணுவமுகாமும் சாம்பல்தீவு 6 ஆம் கட்டை பொலீஸ் நிலையமும் —

அனுராதபுர எல்லையில் தந்திரிமலை இராணுவ மினி முகாம், வாகல்கட இராணுவ முகாம், பழம் புளியங்குளம் இராணுவ பொலீஸ் கூட்டு முகாம் என்பனவும் 3 ஆம் ஈழப்போரில் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன.

[இ-4]

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், செப். 3

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுப் பிரிவின் கீழ் இயங்கும் லெப்டினட் மரிக்கார் பாலர் பாடசாலையின் மூன்றாவது ஆண்டு விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மந்துவில் மேற்கு லெப். மரிக்கார் பாடசாலை அருகில் நடைபெறும்.

(ஐ)

## மாணவருக்கு அழைப்பு

தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி நாளை திங்கட்கிழமை தொடக்கம் மருதனார்மடம் யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. மாணவர்களைப் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

(ஒ)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 3

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கோண்டாவில் மேற்கு 'நிரு' கல்வி நிலையத்தில் காலைநேரப் பாடசாலையாக இயங்க உள்ளது.

அனைத்து மாணவர்களையும் தவறாது இந்த தற்காலிகப் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறும் —

மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ள இடங்கள் பற்றி அறிவதற்காக பெற்றோர்களையும் சமுகமளிக்குமாறும் கோரப்படுகின்றது.

(இ)

★ ★ ★

அளவெட்டி தெற்கு றோ. க. த. க. பாடசாலை நாளை திங்கட்கிழமை முதல் கோப்பாய் வடக்கு சி. சி. த. க. பாடசாலையில் இயங்கும் என்று பெற்றோர், மாணவர்களுக்கு அதிபர் அறிவிக்கின்றார்.

(ஒ)

★ ★ ★

அளவெட்டி அருணோதயக் கல்லூரி, மருதனார்மடத்தில் நடைபெறுகின்றது. மாணவர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

## புலிகளின் குரல் வானொலியில்

**03 – 09 – 1995**

**ஞாயிறு இரவு**

- ★ 8-02 — இசையரங்கம் — திருமதி மிதிலா விவேகானந்தன் பாட்டு
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர்நாடகம்- பொன். கணேசமூர்த்தி எழுதிய "இலங்கைமண்" 9 ஆம் அங்கம்

**04 – 09 – 1995**

**திங்கள் காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**ஞாயிறு மாலை**

- ★ 5-01—சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15—மழலைகளுக்காக
- ★ 5-30 — கதம்பம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# ST. PATRICK'S COLLEGE
## JAFFNA.

## அனுமதி விண்ணப்பம் 1996

பின்வரும் வகுப்புகளுக்கு மட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

| | |
|---|---|
| முதலாம் ஆண்டு | 01 - 02 - 1990 31 - 01 - 1991 (இரு திகதிகளும் உட்பட) பிறந்திருக்க வேண்டும். |
| நான்காம் ஆண்டு | 1987 இல் பிறந்திருக்க வேண்டும் |
| ஆறாம் ஆண்டு | 1985 இல் பிறந்திருக்க வேண்டும் |
| ஒன்பதாம் ஆண்டு | 1982 இல் பிறந்திருக்க வேண்டும் |

★ விண்ணப்பப் பத்திரம் (பரீட்சைக் கட்டணம் உட்பட) ரூபா 125/- 04 - 09 - 1995 தொடக்கம் 25 - 09 - 1995 வரை பாடசாலை நேரங்களில் காலை 9-00 — பி.ப. 1-00 வரை கல்லூரி காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 29 - 09 - 1995 ஆம் திகதிக்கு முன் கல்லூரி காரியாலயத்தில் காலை 9-00 நண்பகல் 12-00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ அனுமதி பரீட்சைத் தினம் 07 - 10 - 1995 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

| ஆண்டு | சமுகம் தரவேண்டிய நேரம் (காலை) | பரீட்சை ஆரம்பம் காலை |
|---|---|---|
| 9 | 8-00 | 8-30 |
| 6 | 8-00 | 8-30 |
| 4 | 8-00 | 8-30 |
| 1 (இல: 01-100) | 8-00 | 8-30 |
| 1 (இல: 101-250) | 10-30 | 11-00 |

★ 6 ஆம், 9 ஆம் வகுப்புகளுக்கு நடத்தப்படும் அனுமதிப் பரீட்சையில் 85% திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமை போல் யாழ். ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

– கல்லூரி அதிபர்.

[சி-2149]

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் தரமான கூட்டெரு விற்பனைக்கு

நகரக் குப்பை கூழங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக், பீங்கான், கண்ணாடி போன்றவை நீக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு நேரடியாகப் பிரயோகிக்கக்கூடிய தரமான கூட்டெரு விற்பனைக்குண்டு.

**டிராக்டர் சுமை ரூபா 500/- மட்டுமே**

சேதனக் கூட்டெருவைப் பயன்படுத்தி சூழலைப் பாதுகாத்து நீண்டு நிலைத்திருக்கும் பயனைப் பெறுவீர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 02 - 09 - 1995

(சி/2162)

## அறிவித்தல்

விறகு, மரம் பயன்படுத்தும் காலைகள், வெதுப்பகங்கள், வடிசாலைகள், உணவகங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களுடனான கலந்துரையாடல்.

விடயம்:

மரம் அறித்தலை தடை செய்தலும், வன்னியிலிருந்து விறகு மரம் கொண்டு வருதலும்.

காலம்:

04 – 09 – 1995 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணி

இடம்:

பலாலி வீதி, திருநெல்வேலி விவசாயக் கல்லூரி மண்டபம்.

மேற்படி கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

விவசாய / சூழல்
பாதுகாப்புப் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
தாவடி, தமிழீழம்.

[சி-2160

உ

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் யுவ வருடம் ஆவணி மாதம் 19ஆம் நாள் நாளை (04 - 09 -1995) திங்கட்கிழமை பகல் 9 மணிமுதல் 12 மணி வரையுள்ள சுபவேளையில்

எமது புத்திரி திருநிறை செல்வி

★ சாந்தினி அவர்களுக்கு ★

பூப்புனித நீராட்டு விழா நடத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு

✶ அன்புடன் அழைக்கின்றோம் ✶

தங்கள் நல்வரவை நாடும்!
பொ. இராசதுரை,
துணைவி: இ. சரஸ்வதி.

இராஜன் சைக்கிள் வேக்ஸ்,
வல்லிபுர பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(சி-2126)

## WANTED

An Experienced Teacher to Teach Botany in the advanced level classes. Contact Principal on 7th Thursday with Necessary documents.

**Principal,**
Jaffna College,
Vaddukkoddai.

[C-2159]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாகரனின் சரிதத்தை திரைப்படமாக்குகிறார் மணிரத்னம்

கொழும்பு, செப். 3

இந்தியாவின் பிரபல முன்னணி சினிமாத் தயாரிப்பாளரான மணிரத்னம் தனது அடுத்த தயாரிப்பாக இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினையையும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் சரிதத்தையும் இணைத்து திரைப்படமாக்கவுள்ளார்.

மணிரத்தினம் அரசியல் விடயங்களை அழகான உரையாடல்களின் மூலம் திரைப்படமாக்குவதில் பிரபலமானவர்.

அண்மையில் முஸ்லிம் தீவிரவாதிகள் என நம்பப்படுபவர்களால் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியின் போது மயிரிழையில் சிறு காயங்களுடன் இவர் உயிர்தப்பினார்.

மணிரத்தினம் தனது புதிய திரைப்படத்திற்காக இலங்கையிலுள்ள இனப்பிரச்சினையை ஆழமாக ஆராய்வதற்காக ஸ்ரீலங்காவுக்கு வருகை தரவுள்ளார் எனவும் அவ்விஜயத்தின் போது அவர் வடபகுதிக்கும் செல்லக்கூடும் எனவும் ''லங்காதீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மணிரத்னம் தனது ஸ்ரீலங்காவிற்கான விஜயத்தின் போது படைத் தளபதிகள் உட்பட அரசாங்க எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தமுக்கியஸ்தர்களைச் சந்திக்க வாய்ப்புக்கள் உண்டாம்.

தலைவர் பிரபாகரனின் சரிதத்தின் ஊடாக ஸ்ரீலங்காவிலுள்ள இனப்பிரச்சினையை புதிய கண்ணோட்டத்தில் அணுகும் நோக்கில் இந்திய இராணுவ அதிகாரிகளுடன் மணிரத்தினம் தற்போது பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகிறார்.

மணிரத்தினத்தின் ''பம்பாய்'' திரைப்படம் தற்போது இந்தியாவில் திரையிடப்பட்டு பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கிறது அத்திரைப்படத்தில் எடுத்தாளப்பட்டுள்ள விடயம் தொடர்பாக ரசிகர்கள் பொறுமையிழந்து பல மோதற் சம்பவங்கள் கூட இடம் பெற்றுள்ளன. இந்து — முஸ்லிம் பிரச்சினையை மையமாக வைத்து ''பம்பாய்'' திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் மணிரத்னத்தினால் தயாரிக்கப்பட்ட ரோஜா, நாயகன், தளபதி ஆகிய படங்களிலும் அரசியல் கலந்து உரையாடல்கள் இடம் பெற்றுள்ளன.

தலைவர் பிரபாகரனின் சரிதத்தின் ஊடாக ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினையை உற்று நோக்க முயலும் மணிரத்தினம் இத்தத் திரைப்படத்தின் மூலம் ஒரு பிரச்சினைக்குரியதயாரிப்பாளராக உருவாகலாம் என ''லங்காதீப'' தெரிவித்துள்ளது.

(ஒ-10)

## சங்கானையில் மீண்டும் இயங்குகிறது

அராலி, செப். 3

இராணுவ நடவடிக்கையை அடுத்து தற்காலிகமாக யாழ். செயலகத்தில் இயங்கி வந்த வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் சங்கானையிலுள்ள பழைய இடத்தில் மீண்டும் கடந்த 31 ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

[ஒ-12]

## ஆலயங்களில்

பனை இரட்டைக்கேணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 31ஆம் திகதி ஆரம்பமாகியது. 10ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவுபெறும். (க-117)

★ ★ ★

பளை புலோப்பளை புனித மரிய அன்னை தேவாலய நவநாள் உற்சவம் கடந்த 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் ஏழாம் திகதி இரவு 7 மணிக்கு திருநற்கருணை ஆராதனையும், திருப்பலிபூஜையும், மறுநாள் காலை திருநாட்பாடற்பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் நடைபெறும்.

[க-117]

★ ★ ★

வல்வை நெடிய காட்டுத் திருச்சிற்றம்பலம் பிள்ளையார் கோயில் உற்சவம் கடந்த 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தேர்த்திருவிழா 8ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 9ஆம் திகதியும் நடைபெறும்.

(க-155]

★ ★ ★

கிளிநொச்சி வட்டக்கச்சி கந்தசாமி கோயில் கும்பாபிஷேகம் எதிர்வரும் 6ஆம் திகதி காலை நடைபெறும்.

(க)

## கல்கிசை பொலீஸ் நிலையத்தில் தமிழ் பத்திரிகையாளரின் முறைப்பாட்டை ஏற்கமறுப்பு

கொழும்பு, செப். 3

கொழும்பிலிருந்து வெளியாகும் ''சரிநிகர்'' என்னும் தமிழ் வார இதழின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த இருவர் கடந்த 20 ஆம் திகதி தெஹிவளையிலுள்ள ஹோட்டலில் அதன் நிர்வாகி முன்னிலையில் அதன் ஊழியர்களால் தாக்கப்பட்டனர்.

இது தொடர்பாக முறைப்பாடு செய்ய கல்கிசை பொலீஸ் நிலையம் சென்ற போது முறைப்பாட்டுக்காரர்கள் தமிழர்கள் என்பதால் அவர்களது முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படவில்லையாம்.

இதன்பின்னர் பத்திரிகையாளர்கள் இருவரும் தெஹிவளைப் பொலீஸ் நிலையம் சென்று தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர். இந்தப் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட போது அவர்களிடம் இருந்து பெறுமதிமிக்க ஆவணங்களும் காணாமற்போயுள்ளனவாம்.

# இலங்கை 700 ஆண்டுகளில் கடலால் அடித்துச் செல்லப்படுமாம்

## நாகித தேரோ கூறுகிறார்

கொழும்பு, செப். 3

''இலங்கையின் நிலப்பகுதி கடலின் அரிப்புக்கு உள்ளாகி வருகிறது இன்னும் 700 ஆண்டுகளில் இலங்கை முற்றாகக் கடலால் அடித்துச் செல்லப்படும்''

''இலங்கை கடல் அரிப்பு'' என்னும் தலைப்பில் மீட்டியாகொட ஸ்ரீபுஷ்பராம பிரிவெனவின் முன்னாள் அதிபரான கல்வட்டி ஹாமுதுருவோ நாகித தேரோ வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்குறிப்பிட்டுள்ளார்.

அவர் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த டொலமியின் இலங்கைத் தேசப்படத்தில் இலங்கையின் வடிவம் பொறித்த ஆனால் பொங்காத அப்பளம் ஒன்று போலிருந்தது பாரசீக வளைகுடாவிலிருந்து மேற்கிந்தியக் கரைநோக்கிப் பிரயாணம் செய்த வணிகர்களின் பயன் கருதி கி. பி. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ''எரித்திரியன் கடலில் சுற்றுப்புறம்'' (Periplus of The Erithrone Sea) என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்தின்படி இலங்கை ஆபிரிக்கா வரை பரந்திருந்ததாகத் தோன்றுவதிலிருந்து இது நிரூபணமாகிறது.

சீன இனத்தவரான பாஹியன் என்ற யாத்திரிகர் இலங்கைக்கு வந்த காலத்திலும் பூர்வீக இலங்கை அப்பளம் ஒன்றின் வடிவத்தில் இருந்ததாகக்கருத முடிகிறது.

இன்று இலங்கையின் வடிவம் சுரைக்காய் அல்லது மாங்காயின் வடிவத்தையே கொண்டுள்ளது. கடல் அரிப்பினால் கடலுக்கு அடித்துச் செல்வதே இந்நிலைக்கு காரணம் என்பது புலப்படுகிறது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

கடலால் சூழப்பட்ட சின்னஞ்சிறு தீவான இலங்கை 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலத்தால் இந்தியாவுடன் தொடுக்கப்பட்டு இருந்தது என்பது பூகர்ப்பவியல், புவியியல் நிபுணர்களினதும் வரலாற்று ஆய்வாளர்களினதும் கருத்து ஆகும்.

கி.பி 412 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த பாஹியன் தனது அறிக்கையில் இலங்கையின் நீள அகலம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அப்போதைய நீளம் 270 மைல்கள் எனவும் அகலம் 450 மைல்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆய்வின்படி இலங்கையின் நீளம் அன்று போல் மாறாதிருக்க அகலத்தில்310 மைல்கள் குறைந்துள்ளன வென்ற உண்மை தெளிவாகிறது. இந்த இழப்புக்குக் காரணம் நிலம் கடலால் அடித்துச் செல்லப்பட்டமையே ஆகும்.

பாஹியனின் வருகையின் பின் கழிந்துள்ள காலம் 1558 வருடங்கள் பாஹியனின் குறிப்பை உண்மையென ஏற்றுக் கொண்டு போதிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளாவிட்டால் கி.பி. 2000 ஆகும்போது 30 ஆண்டுகளில் இலங்கைப் பூமியிலிருந்து மேலும் 6 மைல் வரை கடல் விழுங்கி விடும்.

இந்தக் கணிப்பின் படி அவதானித்தால் இன்னும் 700 ஆண்டுகளில் இலங்கைப் பூமி முற்றாகக் கடலால் அடித்துச் செல்லப்படும்.

(அ)


## விஷேச அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளுக்கு அன்ரனா பொருத்துவதற்கும்,

வீடியோ கமரா, ரி.வி, டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள் திருத்துவதற்கும்

**வீனஸ், டில்கா வாச் & றேடியோ வேக்ஸ்**

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:

பஸ் நிலையம், சாவகச்சேரி.

Our Qualified Experienced Technical & Tutorial Staff

**T. Thanabalasingam** B. Sc. (Ceylon)
Dip - in Electronic Engineering [Lond.]

(சி/2156)


## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்; 07 — 02 — 1947

விண்ணில்: 29 — 08 — 1990

திருமதி
### இராஜேஸ்வரி கதிரவேலு

திதி: 03 - 09 - 1995

சிந்து பாடிய பூங்குயிலானவள்
சிறகடித்து பறந்து போய் இன்று
ஐந்து ஆண்டுகள் ஆனபோதிலும்
அவனிமீதிலே உன் நினைவு ஆடுது
வெந்துயரிலே வாழும் கணவனும்
வேரிழந்த பிள்ளைகள் யாவரும் — உனை
சிந்தை மீதிலே என்றும் போற்றுவோம்

கணவர். பிள்ளைகள்,
உறவினர்கள்.

29, [89] காரைக்காட்டுலேன்,
வல் - வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

[38353]

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு; 24 — 07 — 1928

உதிர்வு; 03 — 09 — 1990

### அமரர் E. K. குமரையா

[இளைப்பாறிய யாழ்.செயலக கட்டட மேற்பார்வையாளர்]

ஆருயிர் துணைவனாய் ஆசை அப்பாவாய், அன்பு பேரனாய் வாழ்வின் வழிகாட்டியாய். எம்மையெல்லாம் வழி நடத்திய எங்கள் குலவிளக்கே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும் உள்ளங்கள்!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

99/6 சந்தான மாதா கோயில் ஒழுங்கை.
யாழ்ப்பாணம்.

(38322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

காலை, மாலை 3 போத்தல் பால் எடுக்கக்கூடிய யமுனாபாறி ஆடு 15 நாட்களுக்குள் குட்டி ஈனக்கூடியது உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. மகாலிங்கம், அங்களப்பாய், இணுவில் கிழக்கு. (38341)

சிமெந்து கொங்கிறீற் கற்கள் (12", 14") உடனடி விற்பனைக்குண்டு. விலாசம் லோ. அருள்ராஜ் (முன்னாளை கிராமசேவகர் காரியாலய வளவு) 6ஆம் மைல் கல்லடி, கட்டுடை, மானிப்பாய். (38349)

3 மாதம் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 386, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (38350)

## தளபாடம் விற்பனைக்கு

கட்டில்கள், மேசைகள், கதிரைகள், Cupboard முதலிய பாவித்த வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 16, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (38342)

## மிருதங்கம்

முழு வேலையும் செய்ய ஆயிரம் மட்டும். புதியது மூவாயிரம். எமது அனுபவ வேலைகள் தமிழீழ கலைஞர்களினால் பாராட்டி கச்சேரிகளில் வாசிக்கப்படுபவையே. K. விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (38295)

## O/L MATHS

O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலயங்களில் Distinction பெறு பேறடையக் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (38323)

## தேவை

ஆங்கிலம், தமிழ் தட்டெழுத்து கற்பிப்பதற்கு அனுபவமுள்ள ஆசிரியைகள் தேவை. தமது சொந்தக் கையெழுத்தில் 5-9-95இற்கு முன் விண்ணப்பிக்கவும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8714)

நல்ல நிலையில் உள்ள ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவையாக உள்ளன. தொடர்பு முகவரி: 106, 4ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம். (சி-2139)

பெண் கொம்பஸிட்டர் தேவை. மாநகரசபை எல்லைக்குள் உள்ளவர் விரும்பத்தக்கது. தேவி அச்சகம், 114/19, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (38284)

## மணப்பெண் தேவை

கௌரவமான குடும்பத்தில் உள்ள இந்து சைவ போசன முள்ள, 29 வயதை நிறைவு செய்த உதயத்தில் செவ்வாய் உள்ள, கொழும்பில் தனியார் நிறுவனத்தில் கணக்காளராகப் பணிபுரியும் ஆணுக்கு பொருத்தமான மணமகள் தேவை. பட்டதாரி, கணக்காளர் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்புகொள்க: இல 837, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38313)

## தவறிவிட்டது

திருமகள் குருநாதன் என்பவரின் பேர்ஸ், தேசிய அடையாள அட்டை (இல. 668110193V), பேராதனைப் பல்கலைக்கழக பல் மருத்துவ பீட அடையாள அட்டை, திறப்புக்கோர்வைகள், ரூபா 4,000/- என்பவற்றுடன் 28-8-95இல் ஆலங்கேணியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், 13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (38345)

## மாதாந்த பயிற்சி

எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன், செப்ரெம்பர் மாத வெளியீடு: 3, 4, 5 ஆம் ஆண்டுகளுக்கு 3-9-95 அன்றும் 6, 7, 8, 9, 10, O/L 16-9-95 அன்றும் வெளியிடப்படும் 2 ஆம் தவணைக்கான பயிற்சி வினாத்தாள்களை இப்போது பெற்றுக் கொள்ளலாம். BOND, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8706)

## O/L 95 பரீட்சைக்காக

கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம், வர்த்தகம், விவசாயம், மனையியல், சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8721)

## SPOKEN ENGLISH

Spoken English With Grammar and Literature கற்பிக்கப்படும். மொழிபெயர்ப்புகளும் செய்யப்படும். V. N. Kandasamy, A. I. B. part I (London), Inter (London) Dip - in English. இல 87, திருநெல்வேலி றோட் (றெயில் கடவைக்குச் சமீபமாக), கொக்குவில். (38347)

## புத்தகங்கள்

நவீன இறையியலின் அடிப்படைகள் -, Catholic Revival In Post - Colonial Sri Lanka, தமிழ் பண்பாட்டில் கிறிஸ்தவம், கிறிஸ்தவ நாகரிகம் சொற்களஞ்சியம், ஆக்கம்: கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2153)

## 'உலக உலா' வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம், செப். 8

வழமையான சிறப்பு அம்சங்களுடன் ஓகஸ்ட் — செப்ரெம்பர் மாத உலக உலா சஞ்சிகை வெளிவந்துள்ளது. (ஓ)

---

உ

ஓம் ஸ்ரீசாயிராம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் யுவ வருடம் ஆவணித்திங்கள் 21 ஆம் நாள் (06-09-1995) புதன்கிழமை உத்தராட நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுப யோக சுப தினத்தில் காலை 6-50 மணிமுதல் 8-05 மணிவரையுள்ள கன்னிலக்ன சுப முகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **ஸ்ரீதரன் - ஸ்ரீ** | **சிவராசசோதி - சிவா** |
| குணரத்தினம் தம்பதிகளின் மகன் | பண்டிதர் சிவசம்புவின் மகள் |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

குருவருள், திருவருள் துணைகொண்டு திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று திருநெல்வேலி அரசடி சிவகாமி அம்மன் ஆலயத்தில் திருமண வைபவம் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, மணமகன் இல்லத்தில் மதிய போசன விருந்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விருந்துபசாரம் மணமகன் இல்லத்தில் 08 - 09 - 1995

தங்கள் நல்வரவை நாடும்;

திரு. திருமதி கே. மகாலிங்கம்
Computer Science Academy
நாவலடி லேன்,
திருநெல்வேலி.

திருமதி ப. சிவசம்பு
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(இரு வீட்டார் அழைப்பு)

★ தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லாமையால் நண்பர்களும், உறவினர்களும் இவ் அழைப்பிதழை ஏற்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

---

# மினிசென்ரர் - யாழிசை

என

## பெயர்மாற்றம்

செய்யப்பட்டுள்ளதை வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு மகிழ்ச்சியோடு அறியத்தருகிறோம்.

- ★ இசைக்கருவிகள் - உதிரிப்பாகங்கள்
- ★ ஆண், பெண் கைக்கடிகாரங்கள்
- ★ சுவர், மேசை மணிக்கூடுகள்
- ★ ரேடியோ வகைகள்
- ★ அழகு சாதன அன்பளிப்புப் பொருள்கள்
- ● கலர் படச்சுருள் கழுவிக் கொடுக்கப்படும். (Colour Photo)
- ★ குறைந்த கட்டணம்
- ★ துரித சேவை
- ● மணிக்கூட்டு பற்றறிகளை மொத்தமாகவும், சில்லறையாகவும், குறைந்த விலையில் தரமாகப் பெற்றுக்கொள்ள.

## ★ யாழிசை ★

114, சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

(38319)

---

# அறிவித்தல்

## யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்

தற்போதுள்ள நிலைமையில் இடம்பெயர்ந்த மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு விண்ணப்பிக்கும் திகதி செப்ரெம்பர் 7ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது. நேர்முகப்பரீட்சைகள் 7 ஆம்திகதிவரை வட்டுக்கோட்டையில் தினமும் மு.ப.9-30 - பி. ப.- 3:30 வரை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் கல்வியாண்டு சகல மாணவருக்கும் செப்ரெம்பர் 11ஆம் திகதி ஆரம்பமாகிறது. யாழ்ப்பாணத்திலும் வட்டுக்கோட்டையிலும் நடத்தப்படும் பாடநெறிகளுக்குத் தெரிவானோர் 11ஆம்திகதி வட்டுக்கோட்டையில் தவறாது சமுகமளிக்கவும்.

— இயக்குநர்

வட்டுக்கோட்டை.

(சி-2146)

---

# "A" LEVEL CENTRE

Ist lane, Point Pedro Rd.
Jaffna

## A/L 95 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு

ஆரம்பம்: 09 - 09 - 1995
SAT. & SUN. 6-15

| | | |
|---|---|---|
| CHEMISTRY | — | நாகரட்ணம் |
| PHYSICS | — | ஜெயசீலன் |
| PURE & APPLIED | — | சத்தியன் |
| ZOOLOGY | — | ஞானேந்திரம் |
| BOTANY | — | யோகேஸ் |

## ★ சிங்கள வகுப்பு ★

ஆரம்பம்: 09 - 09 - 1995
SAT. & SUN. 3 - 00 — 4-00 P.m

இலகு முறையில் சிங்களம் கற்க வேண்டுமா?
எழுத, பேச, வாசிக்க பரீட்சையில் சித்தியடைய
✶ நாட வேண்டிய ஒரே இடம். ✶

# "A" Level Centre

ஆசிரியர் Miss. அலிஸ்ரா

(சி-2154)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஐரிஷ் மோனா!

திருகோணமலையில் இருந்து காரைநகர் நோக்கி வந்து கொண்டிருந்த போது, கடலில் தடுத்து வைக்கப்பட்ட "ஐரிஷ் மோனா" கப்பல் விவகாரம் இன்னும் முற்றாகத் தீர்ந்ததாக இல்லை.

கப்பலில் பிரயாணம் செய்த பொதுமக்களை — பயணிகளை — விடுவிப்பதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துவிட்டனர். கப்பல் மாலுமிகள் சம்பந்தமாக அரசாங்கத்துக்குச் சில நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் விதித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அவை குறித்த விவரம் எதுவும் இப்பத்தி எழுதப்படும் வரை வெளியாகவில்லை.

அது ஒரு புறமிருக்க —

இக்கப்பல் விவகாரம் சம்பந்தமாக அரசாங்கம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஊடாகவே விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டது. யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் அலுவலகம் இயங்குவதால் தான், அதன் ஊடாக விடுதலைப் புலிகளுடன் பேச முடிந்தது.

வடபகுதிக்கு உணவுக் கப்பல்களைக் கொண்டு வரும் விவகாரத்தில் அரசாங்கம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவை வேண்டா வெறுப்புடன் நடத்தியது உலகறிந்த விடயம். செஞ்சிலுவைச் சங்கம் நியாயமற்ற முறையில் நிபந்தனைகளை விதிப்பதாகக் கூட அரச அமைச்சர்கள் சாடினார்கள்.

வடக்கில் உள்ள இராணுவத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களை செஞ்சிலுவைப் பாதுகாப்பில் கொண்டு வந்துசேர்க்கும் உள் நோக்கத்துடன் அரசாங்கம் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு எதிராக இத்தகைய விஷமத்தனமான பிரசாரங்களை மேற்கொண்டது.

"முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையின் போது நவாலி சென். பீற்றேர்ஸ் தேவாலயத்தின் மீது விமானப்படை நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டது உண்மையான சம்பவம்.

இது குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அறிக்கை ஒன்றைவிடுத்ததால் சந்திரிகா அரசுக்கு சர்வதேச மட்டத்தில் கறுப்புப் புள்ளி குத்தப்பட்டது. அந்த ஆத்திரத்தில், வஞ்சம் தீர்க்கும் வகையில் அரசு செஞ்சிலுவைச் சங்கத்தை அவமரியாதையாக நடத்தியது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று கூட சிங்களவர் தரப்பிலிருந்து கர்ண கொடூரத் தொனியில் வற்புறுத்தப்பட்டது.

அரசு அப்போது இருந்த ஆத்திர நிலையில் செஞ்சிலுவைச் சங்கத்தை வெளியேற்றியிருப்பின், இப்போது "ஐரிஷ் மோனா" விடயத்தில் அரசு என்ன செய்திருக்கும்? இது விடயத்தில் கடலில் மூழ்க இருந்த அரசுக்கு மிதவையாக உதவி இப்போது காப்பாற்றுவது செஞ்சிலுவைச் சங்கமே.

இப்போது மட்டுமல்ல இனி மேலும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் உதவி தேவைப்படும் என்பதனை அரசு இதுவரை உணர்ந்திருக்கவேண்டுமே!

# கொழும்பு பஸ், ரயில் நிலையங்களில் தமிழர் தினமும் பெருமளவில் கைது

யாழ்ப்பாணம், செப். 3

தலைநகர் கொழும்பில் மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் அதிகளவில் தமிழ் இளைஞர், யுவதிகள் படையினரால் கைதுசெய்யப்படுகின்றனர். பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள் ஆகியவற்றில் நிற்கும் பொலீஸார் பஸ், ரயில் ஆகியவற்றில் இருந்து இறங்கும் போது தமிழர்களை கைது செய்கின்றனர்.

தவிர பூங்காக்கள், கடற்கரைகள் ஆகிய மக்கள் அதிகமாக கூடும் இடங்களிலும் கைதுகள் இடம்பெறுகின்றன.

கைது செய்யப்படுபவர்களில் பலர் இனந்தெரியாத இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

அத்துடன் அவர்கள் பற்றிய தகவல்களைத் தெரிவிக்கவும் படையினர் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

தற்போது குண்டு வெடிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறியே தமிழர்கள் கொழும்பில் கைது செய்யப்படுகின்றனர். [இ-4]

# எல்லாவற்றுக்கும் கொழும்பையே நம்பும்நிலை மாறவேண்டும்

## பேராசிரியர் வற்புறுத்து

யாழ்ப்பாணம், செப். 3

எல்லாவற்றுக்கும் கொழும்பையே நம்பியிருக்கும் நிலையை மாற்றி எமக்குத் தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்யும் காலத்துக்கு மாற வேண்டும். புதிய தொழில் நுட்பங்களை எமது மண்ணுக்கு அறிமுகம் செய்தால் நாம் உற்பத்தித்துறையில் வளர்ச்சி அடைவது ஒன்றும் கடினமானது அல்ல.

பல்நாட்டு உயிர்நுட்பு நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி நிறுவனத்தின் புதிய உற்பத்திகளான 'யாழ்தோ', 'சிமாட்' மென்பான வகைகளின் (காஸ் சோடாக்களின்) சந்தைப்படுத்தலை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியில் உள்ள நிறுவனத்தில் இந்நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

கொழும்பு காஸ் சோடா வைத்தேடி அலையும் பிரியர்களின் தேவையை எமது உற்பத்திகள் நிறைவு செய்யும் என்றே நம்புகிறேன். —

இரண்டு வருட ஆராய்ச்சியின் விளைவாக எமது மண்ணில் கிடைக்கக்கூடிய அரிசி, மரவள்ளி, சோளம் ஆகியவற்றைக் கொண்டே இந்தப் புதிய பானத்தைத் தயாரித்துள்ளோம் —

இவற்றிலிருந்து வைன், பியர் ஆகிய பானங்களையும் தயாரிக்க முடியும். அவை சம்பந்தமான ஆராய்ச்சி முடிந்து உற்பத்தி அபிவிருத்தி நிலையில் உள்ளது. விரைவில் அந்தப் பானங்களும் தயாரிக்கப்படும்.

அரிசி, மரவள்ளி' சோளம் ஆகியவற்றில் உள்ள மாப்பொருளை நொதியங்கள் மூலம் குளுக்கோசாக மாற்றி அதிலிருந்து மென்பானங்கள், வைன், பியர் போன்றவற்றைத் தயாரிக்க முடிகிறது.

இவற்றின் பக்க விளைவுப் பொருள்களாக [By Products] வாசனைப் பொருள்கள், "ஈஸ்ற்" ஆகியனவற்றையும் பெற ஏதுவாகிறது.

விவசாயம் சார்ந்த கைத்தொழில்கள் [Agro Based Industries] விவசாய உற்பத்திக்கு ஊக்கமளிக்கும். எமது மண்ணில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களைக் கொண்டு புதிய பாவனைப் பொருள்களை அறிமுகப்படுத்துவது எங்கள் நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும் — என்று பேராசிரியர் பாலசுப்பிரமணியம் விளக்கமளித்தார். [அ-4]

## செய்முறை தேர்வுகள்

யாழ்ப்பாணம், செப். 3

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வின் விஞ்ஞான பாடத்துக்குரிய செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதற்கான பரீட்சை நுழைவு அட்டைகளை மாணவர்களுக்கு வழங்கி தேர்வுக்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு தேர்வு ஆணையாளர் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

இதேவேளை —

சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கு முன்னர் தோற்றியிராத தேர்வு நாடிகளுக்குரிய செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம். 19 ஆம் திகதிகளில் முன்னர் குறிப்பிட்ட அதே நிலையங்களில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கச்சதீவு குறித்து மேலும் ஆய்வு நடத்த வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் பாலகுமாரன்

யாழ்ப்பாணம், செப். 3

இந்த நூல் புவியியல் ரீதியாக மக்களைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. கச்சதீவு குறித்த ஆய்வுகள் மேலும் விரிவடைய வேண்டியது முக்கியம்.

"கச்சதீவு அன்றும் இன்றும் நூல் வெளியீட்டு விழாவில் பேசிய விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. வே. பாலகுமார் இவ்வாறு கூறினார்.

"கச்சதீவு அன்றும் இன்றும் நூல் வெளியீட்டு விழா திரு எஸ். எட்வேட் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. பாலகுமார் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

தமிழீழம் விடுதலையடைந்த பின்னரும் கூட இந்தப்பிரச்சினை இருக்கும். எனினும் தமிழக மீனவர்கள் எமது கருத்துக்களைச் செவிமடுப்பார்கள்.

ஒரு சிறிய நிலப்பரப்பான இத்தீவின் முக்கியத்துவம் குறித்து சிங்களவருக்குத் தெரியும். இராணுவ ரீதியான முக்கியத்துவம் இருப்பதனால் புவியியல் அம்சங்கள் குறித்து சிங்களப் புவியியலாளர்கள் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் மண்டைதீவுக்குள் எப்படி நுழைந்தார்கள் என்று அவர்கள் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கிறார்கள் நாமோ புவியியல் ரீதியாகச் சிந்திப்பதில்லை.

இன்று இராணுவத்தினருக்கும் மீனவர்களுக்குமிடையே நாளாந்தம் கடலில் நடக்கும் போராட்டம் மக்களுக்குத் தெரிவதில்லை.

தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றியதே என்பதை தலைவர் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே சிந்தித்ததால்தான் இன்று விடுதலைப் புலிகள் ஒரு சிறந்த கடற்படையை உருவாக்க முடிந்தது. இப்படி அவர் கூறினார்.

திரு. எட்வேட் தனது தலைமை உரையில், சிறிமாவோ, இந்திராகாந்தி ஆகியோர் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு உரியது எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அங்கு இந்திய மீனவர்கள் வலைகளை உலரவிட ஒப்புக்கொள்ளப்பட்டது கச்சதீவின் மீதான உரிமையை முற்றாகக் கைவிட இந்தியா தயாராக இல்லை என்பதைப் புலப்படுத்துகிறது என்றார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, யாழ். பல்கலைக்கழகப் புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் செ. பாலச்சந்திரன், விரிவுரையாளர் திரு. எஸ். சத்தியசீலன், சா. அ. யோசெவ் செல்வி. கலைச்செல்வி, நூலாசிரியர் ஏ. எஸ். ஆனந்தன் ஆகியோரும் பேசினார்கள்.

நடமாடும் துவிச்சக்கர வண்டி மீன்வணிகர் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு விழாவில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளையிடம் இருந்து வடமாகாண கடற்றொழிலாளர் சங்க சமாஜத்தின் தலைவர் திரு. சி. தவரத்தினம் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். [இ-111]

## அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 3

தற்போது நடைபெறும் தமிழீழ பொதுக் கல்வித் தேர்வின் கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, அழகியல், விவசாயம், மனையியல், தொழில் நுட்பப் பாடங்கள், ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களுக்குரிய விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை திங்கள் காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கட்டுப்பாட்டுத் தேர்வாளர் மேலதிக கட்டுப்பாட்டுத் தேர்வாளர், முதன்மைத் தேர்வாளர்கள் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோரை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும். (ஐ)

## கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் காயம்

முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியில் உள்ள காட்டில் வேட்டையாடச் சென்றவர் இன்னொருவர் வைத்த கட்டுத்துவக்கு வெடிக்கு இலக்காகிபடுகாயமடைந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த பி.சோனாமூர்த்தி [42வயது] என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இவர் தற்போது யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (இ-13)

## 50 ஆண்டு நிறைவு விழா

புலோலி தமிழ் இளைஞர் கழகத்தினதும், புற்றளை சனசமூக நிலையத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பும் இன்று ஞாயிறு பிற்பகல் புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-173)

## உமி ஏற்றி வந்த டிரக்டரில் பற்றரிகள்!

பெருமளவு பற்றரிகளை ஏற்றி வந்த சிறிய ட்ரக்ரர் ஒன்றை ஏறாவூர் பொலீஸார் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ட்ரக்ரர் ஏறாவூரில் இருந்து செங்கலடிக்குச் சென்று கொண்டிருந்தது.

பற்றரிகள் உமிக்குள் மறைக்கப்பட்டிருந்ததாகவும் வழமையான சோதனையின் போது இது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-எ)

## பாதுகாவலன் சிறப்பு நாள் நிகழ்வு

யாழ். மறைமாவட்ட தொடர்பு சாதன ஆணைக்குழுவின் அனுசரணையுடன் "பாதுகாவலன்" சிறப்புநாள் கொண்டாட்டங்களை நவம்பர் மாதம் 19 ஆம் திகதி யாழ். நகரில் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

"சமாதானத்தை நோக்கி" என்னும் கருப்பொருளை உள்ளடக்கியதாக சிறுகதை மணிக்கதை, கவிதை, கட்டுரை, ஓவியப்போட்டிகளும் பங்குகள் தோறும் நடத்தப்பட இருக்கிறன.

பாதுகாவலன் எழுத்துப் பயிற்சிப்பட்டறையும் இரு தினங்கள் யாழ். நகரில் நடைபெறும். (க-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா சிவசுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இ. த. சிவசுப்பிரமணியம் 02 - 09 - 1995 இல் காலமானார்.

இவர் பத்மாதேவியின் அன்புக்கணவரும், சாந்தகுமார், செல்வராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், வாமதேவன், ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சுகிர்தநாயகம், பாலநாயகம், புனிததேவி, கமலா, ஜெகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-09-95) ஞாயிறு காலை 10.00 மணிக்கு செ. சுகிர்தநாயகம் ''புனித இல்லம்'' சோதி வேம்படி லேன், மானிப்பாய் எனும் முகவரியில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பத்மாதேவி (மனைவி)

(38356]

## பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரி

சண்டிலிப்பாய் மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரி 01 - 09 - 95 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், விஜிதா, காண்டீபன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி தம்பிப்பிள்ளை, பவளசேனையின் அன்பு மகளும், சிவப்பிரகாசம், சிவசுப்பிரமணியம், பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகந்தினி, ஷமிகர், சிவசொரூபன், சிவசயந்தன், சஞ்சுதா, ஜெயமாரன், ஜெனனி, மயூரதன், சசிகரன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03 - 09 - 1995) கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த. பாலசிங்கம்
(சகோதரன்)

இல. 4, மூளாய் வீதி,
சுண்டுக்குளி.

[38358)

## சின்னத்தம்பி தியாகராசா

[Retired Superintendent of Post Offices]

காரைநகர்

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தியாகராசா 31-8-95 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் வலந்தலை காரைநகர் காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னத்தம்பி சின்னம்மா அவர்களின் அன்பு மகனும், திருமதி பரமேஸ்வரி (றானா) அவர்களின் அன்புக் கணவரும், றவீந்திரன் (கனடா), றாபேந்திரன் (டுப் - கனடா), றேணுகா [ஆஸ்திரேலியா] ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோஜினி, உமையாள், தேவா ராஜநாயகம் [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சேனாதிராசா [Retired O. A., A. G. A.s' office, Vavuniya] மற்றும் திருமதி செல்வநாயகி நவரத்தினம் [Retired Store keeper, Chamers Granneries Colombo] காலஞ்சென்ற நடராசா [Singer Industries, Ratmalana], மற்றும் தங்கராசா (Retired Station Master, Kankesanthurai), திருமதி சிவநாயகி அற்புதராசா ((Asbestos Cement Industries, Ratmalana) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருஞானசெல்வம், திருமதி இராஜேஸ்வரி குணரட்ணம், திருமதி விமலேஸ்வரி நடராசா, திருமதி விக்னேஸ்வரி கனகராசா, குலசபாநாதன் ஆகியோரின் மைத்துனரும், மயூரன், டறன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
சி. தங்கராசா
[சகோதரர்]

இல. 595/10, நாவலர் வீதி,
நல்லூர்.

(38361)

## மரியநாயகம் அருள் அல்பேட்

(சில்லாலை)

(கணக்கியல், கணக்காய்வு பயிற்சிக் கல்லூரி மாணவன்]

சில்லாலையைச் சேர்ந்த அருள் அல்பேட் அகால மரணமாகிவிட்டார்.

இவர் மரியநாயகம் றோசறிமலர் தம்பதிகளின் அன்பு மகனும், யோண் றாஜகுமார், பிரான்சிஸ் சேவியர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (02-09-95) சங்கானை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்ட தென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ம. யோண்றாஜகுமார்
(சகோதரன்]

அராலி, வீதி
சங்கானை

(38363]

## புலிகள்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் மற்றும் கடற்புலிகள் தரப்பினருடனும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் இன்னமும் இருப்பதாக நம்பப்படும் எட்டு மாலுமிகளில் ஐவர் சிங்களவர்கள் என்றும் —

பணயக்கைதிகளாகக் கப்பலில் வைக்கப்பட்டுள்ள ஆண்கள் ஈ.பி.டி.பி. அமைப்பின் ஆதரவாளர்கள் என்றும் கொழும்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி.பி.ஸி. தெரிவித்தது.

இதற்கிடையில் ஐரிஷ் மோனா கப்பலில் பயணம் செய்த பொதுமக்கள் அனைவரும் சுகமாகவும் பாதுகாப்பாகவும் இருப்பதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி நேற்று மாலை தெரிவித்தார். (இ-ஐ-க-4)

## 2 கப்பல்களில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்று அங்கிருந்து பருத்தித்துறை துறைமுகத்துக்கு நேற்று வந்திருந்தது.

தமிழ்நிற்க நேற்று இரவு காங்கேசன்துறைக்குச் சென்ற இந்த இரண்டு கப்பல்களிலும் பொருள்கள் இறக்கும் வேலைகள் பருத்தித்துறையில் இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

அதேசமயம் ஹெற்றல கப்பலில் மா ஏற்றும் வேலை திருகோணமலைத் துறைமுகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அடுத்த வாரம் இக்கப்பல் இங்கு வந்து சேரும். [இ-க-4-173]

## தமிழ்நாட்டின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சாட்டினார்.

மாநிலத்திலிருந்து ஆயுதங்களும் மருந்துவகைகளும் டீசலும் இலங்கைக்குக் கடத்தப்படுவதாகவும் அவர் சொன்னார்.

சிறப்பு முகாம்களிலும் சிறைகளிலும் உள்ள விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

ராஜீவ் கொலை வழக்கை விரைவில் விசாரித்து முடிக்க சாத்தியமான அனைத்தும் செய்யப்படும்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் கைதிகள் வைக்கப்பட்டிருக்கும் பூந்தமல்லி சிறைச்சாலையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிப் பரிசீலிக்க மத்திய உள்துறைச் செயலர் தலைமையில் குழு ஒன்று அடுத்த வாரம் தமிழ்நாடு செல்லும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையை துரிதப்படுத்தும் பொறுப்பு அமைச்சர் சிதம்பரத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. இ-க-4]

வெளிவந்துவிட்டது!

இந்து சாதனம்

ஆவணி இதழ்

மூதறிஞர்
நம. சிவப்பிரகாசம்
நினைவு மலராக
வெளிவந்துள்ளது.

பிரதிகளைப்பெற:-

இந்து சாதனம்
450, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-2163]

## 60 தபால் பொதிகளே வந்தன!

வடமராட்சி, செப். 3

நேற்று பருத்தித்துறைக்கு வந்தடைந்த ''லங்கா கல்யாணி'' கப்பலில் 60 வெளியூர் தபால் பொதிகள் மட்டுமே எடுத்து வரப்பட்டுள்ளன.

பருத்தித்துறை தபால் நிலைய அதிபர் திரு. அரியரட்ணம் அவற்றை நேற்று பொறுப்பேற்றார்.

பெரும்பாலான தபால் பொதிகள் கிழிந்த நிலையில் காணப்பட்டன.

கொழும்பில் சுமார் ஆயிரத்து 500க்கு மேற்பட்ட தபால் பொதிகள் கடந்த பல மாதங்களாகத் தேங்கிக் கிடக்கின்றன.

அவற்றில் 60 பொதிகள் மட்டுமே கடந்த 4 மாதங்களின் பின் முதன் முறையாக இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன. (ஐ-173)

## கிராம அலுவலர்களின் படம் திறப்பு

சண்டிப்பாய், செப். 3

நவாலி தேவாலயப் பகுதியில் புக்காரா விமான குண்டு வீச்சின்போது மரணமடைந்தவர்களான இரு கிராம அலுவலர்களின் உருவப்படங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

கடமையில் இருந்த வேளையில் பலியானவர்களான சில்லாலை தெற்கு கிராம அலுவலர் அமரர் பி. கபிரியேற்பிள்ளை, நவாலி வடக்கு கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராசா ஆகியோரின் திருவுருவப் படங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலரும், யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான திரு. து. வைத்திலிங்கம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

(ஒ-135)

## ஷெல் வீச்சு

நேற்று மாலை மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (இ-13)

## இலங்கை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை —

விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பு என்று அதிகாரபூர்வமாக அழைக்க முடியும் என வாஷிங்டன் நம்பவில்லை. என்றும் செல்வி ரொபின் ராபெல் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஆட்கள் காணாமற்போன சம்பவங்கள் மற்றும் கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்த அரசு நியமித்த ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி தெரிவித்த அவர் மனித உரிமைகள் தொடர்பான இலங்கை அரசின் நடவடிக்கைகளை அமெரிக்கா தொடர்ந்தும் அவதானித்து வரும் என்றும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறவேண்டும் என்றே வாஷிங்டன் விரும்புகிறது என்றும் அவர் கூறினார்.

தென்னாசிய நாடுகளுக்கான தமது பயணத்தில் ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த வியாழனன்று கொழும்பு வந்த செல்வி ரொபின் ராபேல் வெளிவிவகார அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட அரசின் உயர்நிலை அதிகாரிகளுடன் பலசுற்றுப் பேச்சு நடத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரையும் அவர் சந்தித்தார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் நடத்திய உத்தியோகபூர்வ பேச்சுக்களின் போது தற்போது இடம்பெறும் யுத்தம் குறித்தும் விரிவாகப் பேசப்பட்டதாக ரொபின் ராபெல் தெரிவித்தார். [இ-6-4)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் கந்தையா

[இளைப்பாறிய தபால் அதிபர் — கோப்பாய்]

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் கந்தையா அவர்கள் கொழும்பில் காலமானார்.

அன்னார் தெய்வநாயகியின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி [ஆசிரியை யாழ். கைதடி முத்துக்குமாரசுவாமி ம. வி], ராஜேஸ்வரி, ஆறுமுகம் [ராஜன்] [சுவிற்சலாந்து], வீமராஜன் [முன்னாள் அலுவலர்— ஹட்டன் நஷனல் வங்கி], குலராஜன் [வீதி அபிவிருத்தி அதிகார சபை மன்னார்], பாலராஜன் [சவூதி அரேபியா], ஆனந்தராஜன் [சுவிற்சலாந்து], ஜெகராஜன் [முகாமையாளர் - ஹட்டன் நஷனல் வங்கி மன்னார்], விக்கினேஸ்வரி [ஹட்டன் நஷனல் வங்கி பம்பலப்பிட்டி], விக்னராஜன் [பொறியியலாளர் - தொலைத் தொடர்பு நிறுவனம் கொழும்பு], தனேஸ்வரி [இந்தியா] ஆகியோரின் பாசமிகு தந்தையும்—

ஆறுமுகநாதன் [களஞ்சிய மேற்பார்வையாளர், றெக்கிற் அன்ட் கோல்மன் - இரத்மலானை], சுப்பிரமணியம் (பிரதம லிகிதர், கஸ்தூரப் பகுதி, யாழ். மாநகர சபை], சிவலி [சுவிற்சலாந்து], பாக்கியநாயகி, இந்திரா (ஆசிரியை, றோமன் கத்தோலிக்க அ. த. க. பாடசாலை ஏழாலை), மனோன்மணிதேவி, செந்தில்செல்வி [சுவிற்சலாந்து], மோகனதாஸ் [கணனி வகுப்பாய்வாளர், மஸ்கன்ஸ், கொழும்பு], மங்களமூர்த்தி [இந்தியா] ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலஞ்சென்ற சுப்பையா மற்றும் நவரட்ணராஜா [இளைப்பாறிய தபால் நுண்ணாய்வுப் பரிசோதகர்], காலஞ்சென்ற தம்பு[பிரதம லிகிதர் புகையிரதத்திணைக்களம்], தங்கம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்,

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று [03-09-95] பிற்பகல் 6.00 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

தகவல்!
புவனேஸ்வரி ஆறுமுகநாதன்
[மகள்]
கைதடி

1/5, C. D. I. Residential-
Apartments,
Manning Place,
Colombo - 06.

(38362]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, ... அச்சகத்தில் 03 - 09 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org